DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 88/2011 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 9 |
| | |
| Name | முத்தையா |
| Father / Husband Name | ராமசந்திரன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 27th July 2022.

---

முதல் விசாரணை:-

நான் சிவகங்கை புதுப்பட்டி உலகநாதபுரத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் சக்கந்தி மில்லில் வேலை செய்து வருகின்றேன். 03.06.2011 ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் சிவகங்கை டவுன் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். நானும், பூபதியும் அங்கு இருந்தோம். எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அ.சா.ஆ. 4 பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

சம்பவ இடத்தில் எங்கள் முன்பாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் காவல்

ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும் 5 வது வரை படித்துள்ளேன். பார்வை மகஜரில் உள்ள விஷயங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 27.07.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.